**NOVEMBER 2015** **70001/CLA1A/DLA1A**

---

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — (10 × 2 = 20 மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுள் <u>பத்து வினாக்களுக்கு 30 சொற்களில்</u> விடை தருக.

1. திருவாசகத்தின் பெருமையை மனோன்மணியம் சுந்தரம்பிள்ளை எங்ஙனம் சுட்டியுள்ளார்?

2. திருவருட்பா — குறித்தெழுதுக.

3. பொம்மை அடிமைகள் என்று கவிமணி யாரைக் குறிப்பிடுகிறார்?

4. அழகின் சிரிப்பு — நூல் குறிப்பு தருக.

5. இடஞ்சுட்டிப் பொருள் விளக்கம் தருக :

   "கட்டுறுதி யுள்ளவுடல்; கண்ணிலே நல்லகுணம்

   ஒட்டுறவே நன்றா உரைத்திடுஞ்சொல்"

6. இலக்கணக்குறிப்பு தருக.

   (அ) கெடுவழக்கு

   (ஆ) தமிழணங்கே

   (இ) தீஞ்சுவை

   (ஈ) ஆட்டுகின்றேன்.

7. இசையமைப்பாளர் ஒருவரை நேர் காண்க.

8. பொருந்திய சொல் தருக :

(அ) நுதல் (தலை, நெற்றி, வயிறு)

(ஆ) நேயம் (அன்பு, அருள், பாசம்)

(இ) சேவகன் (படகோட்டி, பணியாள், தலைவன்)

(ஈ) குடமுனி (அகத்தியர், தொல்காப்பியர், கம்பர்).

9. பின்வரும் மரபுத் தொடர்களுக்குத் தமிழ் வடிவம் தருக.

(அ) Breathing Time

(ஆ) On account of

(இ) Nip in the bud

(ஈ) To be in one's good books

10. நிலத்தை ஜெயித்த விதை யார்? ஏன்?

11. வாக்குச்சீட்டின் இன்றைய நிலையின் வேதனைப்பாட்டை எழுதுக.

12. 'கண்ணன் என் சேவகனாக' பாரதியார் சுட்டும் கருத்துக்கள் இரண்டினைக் கூறுக.

பகுதி ஆ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

பின்வருவனவற்றுள் ஐந்து வினாக்களுக்கு 200 சொற்களில் விடையளிக்க.

13. தமிழ்த்தெய்வ வணக்கப் பாடற்கருத்தை எழுதுக.

14. கோவில் வழிபாடு குறித்த பாடற்கருத்தைப் புலப்படுத்துக.

15. இராமலிங்கரின் ‘கோடையிலே’ என்ற அருள்விளக்கமாலை உரைக்கும் செய்திகள் யாவை?

16. ஈரோடு தமிழன்பன் குறித்து எழுதுக.

17. பின்வரும் சொற்களுக்குக் கலைச்சொல்லாக்கம் தருக.

(அ) Anemometer

(ஆ) Charishma

(இ) Canopy

(ஈ) Barometer

18. இயற்கை அழகு தரும் ஆலமர நிகழ்வை எழுதுக.

19. கவிமணியின் கவிதைச் சிறப்பை விளக்குக.

பகுதி இ — (3 × 10 = 30 மதிப்பெண்கள்)

பின்வருவனவற்றுள் மூன்று வினாக்களுக்கு 500 சொற்களில் விடை எழுதுக.

20. வைரமுத்துவின் கவிதையாளுமையை நும் பாடற்பகுதி கொண்டு எழுதுக.

21. கதிக்குவழியாக இராமலிங்கர் புலப்படுத்துவன யாவை?

22. பாரதியார் உரைக்கும் கண்ணன் பெருமைகளை எழுதுக.

23. புதுக்கவிதையின் இலக்கிய வரலாற்றை எழுதுக.

24. 'செம்மொழி' குறித்து ஒரு கட்டுரை வரைக.